செய்தி வெளியீடு எண்:092 நாள் : 12.02.2016

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் பிப்ரவரி மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 13.02.2016 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | தூய மாற்கு நடுநிலைப்பள்ளி, (அய்யா பள்ளி) 62/123, வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை – 600 003. (பெரியமேடு மசூதி அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை உயர்நிலைப்பள்ளி, எண்.1, ஏஏ திட்ட சாலை, புது வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 081. (எம்.பி.டி.குவார்ட்டர்ஸ் மசூதி எதிரில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை தொடக்கப்பள்ளி, பாப்பம்மாள் 12வது தெரு, ஜி.கே.எம்.காலனி, சென்னை – 600 082. (கே,9 பெரவள்ளூர் காவல் நிலையம் அருகில்) |
| 4 | அண்ணாநகர் | கோட்டம் எண்.112 ஜெயகோபால் கரோடியா அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சூளைமேடு நெடுஞ்சாலை, சூளைமேடு, சென்னை– 600 094.(ஆர்.பி.ஐ.காலனி அருகில்) |
| 5 | அம்பத்தூர் | மீனாட்சி மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, ஆர்–54, டி.வி.எஸ்.காலனி, 52வது தெரு, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், சென்னை – 600 101. (எஸ்.கே.எஸ்.மருத்துவமனை அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | மத்திய வருவாய் குடியிருப்பு, 15வது மெயின் ரோடு, அண்ணாநகர், சென்னை– 600 040. (சந்திரமௌலீஸ்வரர் கோயில் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | ஸ்ரீ குருமூர்த்தி வித்யாலயா உயர்நிலைப்பள்ளி, 223, ஆர்.வி.நகர் முதல் பிரதானசாலை (பள்ளி தெரு), ஆர்.வி.நகர், கொடுங்கையூர், சென்னை–600 118. |
| 8 | ஆவடி | எம்.ஜி.ஆர்.நகர் குடியிருப்பு நலசங்கம், எம்.ஜி.ஆர்.நகர் 2வது தெரு, புழல், சென்னை – 600 066. |
| 9 | தி.நகர் | சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, காமராஜர் தெரு, எம்.ஜி.ஆர் நகர், சென்னை –78. (அஜந்தா பேருந்து நிறுத்தம் அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | புனித லூயிஸ் காதுகேளாதோர் மற்றும் பார்வையற்றோர் பள்ளி, கால்வாய்கரை சாலை, காந்தி நகர், அடையார், சென்னை–20, (அடையார் புற்றுநோய் மருத்துவமனை அருகில்) |
| 11 | பரங்கிமலை | நிதி மேல் நிலைப்பள்ளி, ஆலந்தூர், சென்னை–16 (பரங்கிமலை இரயில் நிலையம் அருகில்), |
| 12 | தாம்பரம் | பெரியார் சமுதாய நல கூடம், புது பெருங்களத்தூர், சேரன் தெரு, ஆர்.எம்.கே. நகர், சென்னை –63. (பேரறிஞர் அண்ணா பூங்கா அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | ஸ்ரீ அன்ன பூரணி அம்மாள் நடுநிலைப்பள்ளி, 99, பழைய மாம்பலம் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை–15. (காரணீஸ்வரர் கோயில் குளம் எதிரில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை நடுநிலைபள்ளி, எண் 64, ராமா தெரு, நுங்கம்பாக்கம், சென்னை–34 (சிவசுப்ரமணியன் கோயில் அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரி வளாகம், எண் 24, அருணாச்சலம் தெரு, சேப்பாக்கம், சென்னை–5. (கலைவாணர் அரங்கம் எதிரில்) |
| 16 | சோழங்கநல்லூர் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சித்தாலப்பாக்கம், சென்னை–126. (கேஜி014 நியாயவிலை அங்காடி அருகில்) |

இணை ஆணையாளர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**